197

உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு கார்த்திகைத் திங்கள் நவம்பர்-1953 | இதழ் 8

திருப்புகழ்

பொது

சுருதி யூடு கேளாது சரியை யாளர் காணாது
துரிய மீது சாராது எவராலுந்-
தொடரொ ணாது மாமாயை யிடைபு காது ஆனாத
சுகம கோத தீயாகி யொழியாது;

பருதி காயில் வாடாது வடவை மூளில் வேகாது
பவனம் வீசில் வீழாது சலியாது-
பரவை சூழி லாழாது படைகள் மோதில் மாயாது
பரம ஞான விடேது புகல்வாயே;

நிருதர் பூமி பாழாக மகர பூமி தீமூள
நிபிட தாரு காபூமி குடியேற-
நிகர பார நீகார சிகர மீது வேலேவு
நிருப வேத ஆசாரி யனுமாலும்;

கருது மாக மாசாரி கனக கார்மு காசாரி
ககன சாரி பூசாரி வெகுசாரி-
கயிலை நாட காசாரி சகல சாரி வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

18–29

பதவுரை

திருதர் பூமி பாழாக - அரக்கர்களுடைய நாடுநகரங்கள் இடிந்து அழிந்து ஒழியவும், மகரபூமி தீமூள - மகர மீன்கள் வாழுகின்ற கடல் வற்றி நெருப்பு மூளவும், நிபிட தாருகா பூமி குடியேற - நெருங்கியுள்ள கற்பகம் முதலிய தருக்களை யுடைய விண்ணுலகத்தில் தேவர்கள் குடியேறவும், நிகர - பூத சேனைகளை விழுங்கியதும், பாரகனமானதும், நீகார - அவமதிக்கத் தக்கதுமாகிய, சிகரமீது வேல் ஏவு - கிரவுஞ்சமலை மீது வேலாயுதத்தை விடுத்தருளிய, நிருப - தலைவரே! வேத ஆசாரியனும் - வேதங்களில் வல்ல பிரம தேவனும், மாலும் - நாராயணரும், கருதுமாக மா சாரி - நியானிக்கின்ற ஞான வெளியாகிய அம்பலத்தில் ஆடுகின்றவரும், கனக கார்முக ஆசாரி - பொன்மலையை வில்லாகவுடைய குருநாதரும், ககன சாரி - பெரு வெளியில் விளங்குபவரும், பூசாரி - பூசிக்கத்தக்கவரும், வெகுசாரி கயிலை நாடக ஆசாரி - கயிலையில் அநேகவிதமாக திருநடனம் புரிபவரும், சகலசாரி - எல்லா இடங்களிலும் சஞ்சரிப்பவரும் ஆகிய சிவ பெருமானுடைய, வாழ்வு ஆன-பெருவாழ்வு தரும் திருக்குமாரராகிய, கருணை மேருவே - கருணையில் மேரு மலைபோல் உயர்ந்து விளங்கும், பெருமாளே - பெருமையின் மிக்கவரே! சுருதி ஊடு கேளாது-வேதங்களிடை கேட்டு அறியமுடியாததும், சரியையாளர் காணாது - சரியை நெறியில் நின்றவர்களால் கண்டு அறிய முடியாததும், துரியமீது சாராது - துரியநிலையில் வந்து பொருந்தாததும், எவராலும் தொடர வொணாது - யாராலும் தொடர்ந்து எட்ட முடியாததும், மாமாயை இடைபுகாது - பெரிய மாயைக்குள் அகப்படாததும், ஆனந்த சுக மகா உததியாகி - ஒருபோதும் கெடாத பெரிய இன்பக் கடலாகியும், ஒழியாது - ஒரு பொழுதும் முடிவு இல்லாததும், பருதிகாயில் வாடாது - கதிரவன் வெய்யிலினால் வாடாததும், வடவை மூளில் வேகாது - வடவைத்தீயினால் வெந்து அழியாததும், பவனம் வீசில் விழாது - பெருங் காற்றினால் சாய்ந்து விழாததும், சலியாது - சலித்தல் இன்றி ஒரு தன்மையாகத் திகழ்வதும், பரவை சூழில் ஆழாது - கடல் பொங்கி வந்தாலும் அழுந்தாததும், படைகள் மோதில் மாயாது - ஆயுதங்களினால் தாக்கினாலும் அழியாததும் ஆகிய, பரம ஞான வீடு ஏது புகல்வாயே - பெரிய ஞான வீடுபேறு எதுவோ அதனை அடியேனுக்கு உபதேசித்து அருள்புரிவீர்.

பொழிப்புரை

அவுணர்கள் வாழ்ந்த நாடு நகரங்கள் பாழ்படவும், மகர மீன்கள் வாழுகின்ற கடலில் தீ எழுந்து வற்றிப் போகுமாறும், நெருங்கிய கற்பகமுதலிய தருக்களையுடைய பொன்னுலகத்தில் அமரர்கள் குடிபுகவும், பூதசேனைகளை விழுங்கியதும் திண்ணியதும், அவமதிப்புடையது மாகிய கிரவுஞ்சமலைமீது வேலா

யுதத்தை விடுத்தருளிய தலைவரே! வேதங்களில் வல்ல பிரம தேவரும் திருமாலும் இருந்து தியானஞ் செய்கின்ற ஞானவெளியாகிய அம்பலத்தில் ஆடுகின்றவரும், பொன்மலையை வில்லாக வுடைய குருநாதரும், பரவெளியில் விளங்குபவரும், எல்லாராலும் பூசிக்கப் பெற்றவரும், அநேக விதமாகக் கயிலையில் திருநடனம் புரிபவரும், எல்லா இடங்களிலும் சஞ்சரிப்பவருமாகிய சிவபெருமானுடைய திருக்குமாரராகிய, கருணையில் மேருமலை போல் உயர்ந்து விளங்கும் தேவர்கள் போற்றும் பெருமிதமுடையவரே! வேதங்களிடைக் கேட்டு அறிய முடியாததும், சரியை நெறியில் நின்றவர்களால் காண்பதற்கு முடியாததும், துரிய நிலையில் வந்து பொருந்தாததும், யாவராலும் தொடர்ந்து எட்ட முடியாததும், பெரிய மாயையுள் நுழையாததும், ஒருபோதும் கெடாத பெரிய இன்பக் கடலாகி விளங்குவதும், முடிவு இல்லாததும், சூரியனுடைய வெயிலில் உலராததும், வடவைத் தீ மூண்டாலும் வெந்து அழியாததும்,பெருங்காற்று வீசினாலும் சாய்ந்து விழாததும், அசைதலின்றி ஒருதன்மையாக இருப்பதும், கடல்பொங்கி எழுந்தாலும் அதில் முழுகாததும்,ஆயுதங்களால் தாக்கினாலும் அழியாததும் ஆகிய பெரிய ஞான வீடுபேறு எதுவோ அதை அடியேனுக்கு உபதேசித்து அருள் புரிவீர்.

விரிவுரை

நிருதர் பூமி பாழாக:—

சூராதியவுணர்கள் வாழ்ந்த வீரமகேந்திரபுரம், ஆசுரம், மாயமாபுரம் முதலிய பெரும்பட்டினங்கள் வேலாயுதத்தாலும் முருகவேள் பணித்தபடி வருணனாலும் அழிந்துபட்டன.

வேல்—ஞானம்

அசுரர்—அஞ்ஞானம்

ஞானத்தினால் அஞ்ஞானத்தின் இருப்பிடங்கள் அழிவுற்றன.

மகரபூமி தீமூள:—

மகர மீன்கள் வாழ்வதனால் கடலுக்கு மகராலயம் என்று ஒரு பேருண்டு. நூறுயிரங் கோடி அண்டங்களிலுள்ள அக்கினிகளும் ஒருங்கே திரண்டது போன்ற வேலாயுதத்தின் வெம்மையால் கடல் வற்றி வறண்டுவிட்டது.

"வேலைவற்றி வறண்டு சுறீல் சுறீலென" —திருப்புகழ்.

கடல் என்பது, பிறவியைக் குறிக்கும். பிறவிப் பெருங் கடல் என்பார் திருவள்ளுவர். "பவசாகரத்திலழுந்தி" என்பது வேதமலைத் திருப்புகழ். ஆகவே பிறவியாகிய கடல் ஞானமாகிய வேலினால் வற்றிவிட்டது என்பதை உணர்க.

"வேலைதுகள்பட்டு மலை சூரனுடல்பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக்காரனும்" —திருவகுப்பு.

நிபிட தாருகாபூமி:—

நிபிடம்—நெருக்கம்.

தாருகாபூமி—தருவுள்ள இடம். விண்ணுலகத்தில் கற்பகம், அரிசந்தனம், மந்தாரம், சந்தானம், பாரிஜாதம் என்ற ஐந்துவிதமான தருக்கள் உண்டு. இவைகள் அநேக நலன்களைச் செய்ய வல்லவை. பாற்கடல் கடைந்தபோது அமிர்தத்துடன் பிறந்தவை. இப் பொன்னுலகிற்குத் தலைநகரம் அமராவதி. சூரபன்மனுடையமகன் பாநுகோபன் பொன்னுலகைக் கவர்ந்து கொண்டனன். இந்திரன் முதலிய இமையவர் பல யுகங்கள் நாடு நகரங்களை யிழந்து பெருங்கவலையுற்றனர்கள். முருகப் பெருமான் சூர் முதலை வேர்முதலோடு களைந்து, விண்ணவரைப் பொன்னுலகில் குடியேற்றி யருளினர்.

நிகர பார நீகார சிகரம்.—

"நிகரம் பயி லமுதுண்டவர் நிறைவெய்தியிருந்தார்" —மகாபாரதம்.

நிகரம்—விழுங்குகை.

பாரம்—திண்மை.

நீகாரம்—அவமதிப்பு.

சிகரம்—மலை; கிரவுஞ்சகிரி.

கிரவுஞ்சமலை மாயையினால் பூத சேனைகளையும் இலக்கத்தொன்பான் வீரர்களையும் விழுங்கியது. அம்மலையை வேற்படையால் பிளந்து குமரவேள் அமரரை வாழ வைத்தருளினர்.

வேத ஆசாரியன்:—

வேதங்களில் வல்லவர் பிரமதேவர். வேதன் என்ற பேரும் உடையவர்.

"வேதனகிய மறையோனெடு வினை
யாடியே" —திருப்புகழ்.

கருதுமாக மா சாரி:—

கருதுதல்—தியானித்தல்.

மாகம்—ஆகாயம்.

மா—பெருமை.

சாரி—நடிப்பவர்.

ஆகாயத்தலமாகிய சிதம்பரத்தில் ஒருபுறம் திருமாலும், மற்றொரு புறத்தில் பிரமதேவரும் இருந்து அம்பலவாணரைத் தியானித்துக்கொண்டிருக்கின்றனர்கள்.

அகில வுலகங்களும் உய்யும்பொருட்டு எம்பெருமான் ஆதியும் அந்தமுமின்றி, அநவரத ஆனந்தத் தாண்டவமாடுகின்ருர். எல்லாப் பொருள்களும் அதனுல் வாழுகின்றன.

நம்முடைய நிழலை நாம் அசையச் செய்யவேணுமானுல் நாம் அசையவேணும். நாம் அசைந்தால்தான் நமது நிழலசையும். அதுபோல் நடராஜ மூர்த்தி ஆடுவதனுல்தான் கதிர் மதி மண் விண் அணு முதலிய அனைத்தும் அசைகின்றன.

கனக கார்முகாசாரி:—

கனகம்—பொன். கார்முகம்—வில்.

திரிபுரசங்கார காலத்தில் சிவபெருமான் பொன்மலையாகிய மேருகிரியை வில்லாகப் பிடித்தருளினுர். அதனுல் மலை வில்லார் என்று அவருக்கு ஒரு பேருண்டு.

'கல்லால் நிழல் மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணையடி நல்லார் புனைவரே'

—சிவஞானபோதம்.

ககனசாரி:—

ககனம்—வெளி. வெளிகளுக்கும் அப்பாலுள்ள பரவெளி. நாம் உலாவுகின்ற வெளி பூதாகாசம். அது ஞானகாசம். அங்கே இறைவனுடைய அருளால் நிகழ்கின்றது.

பூசாரி:—

பூசை செய்பவன் பூசாரி.

சிவபெருமான் "சேர்ந்தறியாக்கையான்" "பின்ருஞ்சடையான்", "தலையாய தேவாதி தேவர்க் கெல்லாம் சேயான்" ஆதலினுல் அவர் ஒருவரையும் வழிபடுவதில்லை; வழிபாட்டு முறையைக் காட்ட தன்னைத்தானே பூசிப்பர்.

எல்லாராலும் பூசிக்கபடுபவர். சகல தேவர்களும் அவரைப் பூசித்து எல்லா நலன்களையும் பெற்ருர்கள். திருவீழிமிழலை, திருப்பிரமபுரம், கண்ணுர்கோயில் முதலிய திருத் தலங்களைக் காண்க.

வெகுசாரி கயிலை நாடகாசாரி:—

சாரி—வட்டமாக ஓடுதல்.

"திரிந்தார் நெடுஞ்சாரி" —கம்பராமாயணம்.

இறைவன் திருநடனம் புரியும்போது வட்டமாகவும் வேறு பலவிதமாகவும் சுழன்றனர்.

கலைகளுக்குள் உயர்ந்த கலை நடனக்கலை. அக் கலைக்குப் பாதநூல் என்ற ஒரு பேருமுண்டு.

ப — பாவம்
ர — ராகம்
த — தாளம்

பாவ ராக தாளம் மூன்றுடன் கூடியது பரதம்.

இக் கலைக்குக் குருநாதர் நடராஜ மூர்த்தி.

"திமிதமென முழவொலி முழங்கச் செங்கைத்
தமருகம ததிர் சதியொடன்பர்க் கின்பத்
திறமுதவு பரத குரு" —திருப்புகழ்.

சகலசாரி:—

சாரி—சஞ்சரித்தல்.

எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான். அதனால் எல்லாவற்றையும் அறிகின்றான். அறிந்து எல்லாவற்றையும் அசைக்கின்றான்.

"அண்டபகிரண்டமுமடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே"

சுருதி யூடு கேளாது:—

இறைவனால் அருளப்படுவது சிவஞானம்; (பரஞானம்) வேதாகமங்கள் அபரஞானம். (கலைஞானம்); அபர ஞானத்தால் பரஞானத்தை யறிய முடியாது. பரஞானம் உதிப்பதற்கு அபர ஞானம் துணைபுரியும்.

சுருதி—வேதம். காதால் கேட்கப்படுவது என்பது இதன் பொருள். வேதம் எழுதாக்கிளவி.

"வேதத்திற் கேள்வியிலாதது"

சரியையாளர் காணாது:—

சரியை-இறைவனை யடைதற்குரிய படிகளில் ஒன்று. அதிலேயே நின்றவர் இறைவனையடைய முடியாது. சரியை அரும்பு போன்றது. அதனால்தான் ஞானமாகிய கனி உண்டாகும். சரியை—அரும்பு, கிரியை—மலர், யோகம்—காய், ஞானம்—கனி.

விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ் ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றே பராபரமே
—தாயுமானார்.

அரும்பு மலராக வேணும்; மலர் காயாகவேணும்; காய் கனியாக வேணும். அங்ஙன மின்றி அரும்பு மலராது கருகிவிடுமாயின் அரும்பினால் பயனில்லை. அதுபோல் சரியையால் கிரியையும், கிரியையால் யோகமும், யோகத்தால் ஞானமும் பெறவேண்டும். பரகதிக்கு நேர்வழி, ஞானம் ஒன்றே யாகும். "ஞான மலது கதி கூடுமோ" என்றார் தாயுமானார்.

"சரியை யாளர்க்குமக் கிரியையாளர்க்கு மற்
சகல யோகர்க்கு மெட் டரிதாய"
—திருப்புகழ்.

துரியமீது சாராது:—

துரியம் நான்காவது அவத்தை. அது நாபியில் பிராண னுடன் புருடன் கூடி நிற்கும் நிலை.

"வழுத்திய நாபியிற்றுரியப் பிராணனோடு
மன்னுபுருடனுங் கூடிவயங்கா நிற்கும்"
—தாயுமானார்.

அதற்கு மேல் துரியாதீதம். அது மூலாதாரத்தில் புருடன் மட்டுந் தனித்து நிற்பது. அவத்தையைந்துங் கடந்த இடத்திலே விளங்குவது பரஞானம்.

"அட்டாங்கயோகமும் ஆதாரமாறும் அவத்தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப் பொன்றுகண்டேன்"
—பட்டினத்தார்.

எவராலுந் தொடரொணாது:—

ஏனைய சமயவாதிகளை இது குறிக்கின்றது. சிவசமய நெறிநின்று சித்தாந்த ஞானமுற்று, சரியை கிரியை யோகங் களைப் பயின்றபின் திருவருளால் உண்டாகும் சிவ ஞானம் ஒன்றுலேயே அது அறியத்தக்கது. அந்த ஞானம் கைவரப் பெற்ற நம்பியாரூரர் தொடர்ந்து பற்றினர்.

ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்தணன்
காவணத்திடையே யோடக் கடிது பின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரையுற்றூர் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையினுரை யார் தொடர்ந் தெட்ட வல்லார்.

"ஓது சரியை கிரியையும் புணர்ந்தவர் எவராலும்
ஓத அரிய துரியங் கடந்தது"
—திருப்புகழ்.

மாமாயை யிடைபுகாது:—

மாயா— மா-தோற்றம்; யா-ஒடுக்கம். உலகத்தின் தோற் றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக விருப்பது மாயை; அம்மாயைக்கு அப்பாற்பட்டது மெய்ப்பொருள்.

"மாயைக்குச் சூழொணாதது" —திருப்புகழ்.

ஆனாத சுகமகோததீயாகி:—

ஆனாத—கெடாத.

மெய்ஞ்ஞானத்தால் வரும் சுகம் ஒருபோதும் கெடாததும் நீங்காதது மாகும்.

"ஆனாத ஞானபுத்தி" —திருப்புகழ்.
"ஆனா வமுதே" —அநுபூதி.

சுகம்—இன்பம்

மகோததி—பெருங்கடல். பேரின்பப் பெருங்கடல்.

"வீடு பரம சுகசிந்து" என்கின்றார் திருவானைக்கா திருப்புகழில்.

பருதிகாயில் வாடாது வடவை மூளில் வேகாது.........:—

நித்தியமாயுள்ள அப்பொருளை சூரியனால் உலர்த்த முடியாது; நெருப்பால் வேகவைக்க முடியாது, காற்றினால் அசைக்கமுடியாது; தண்ணீரால் கரைக்க முடியாது; ஆயுதங்களால் சேதிக்க முடியாது.

'நைநம் தஹம்தி சஸ்த்ராணி
நைநம் தஹதி பாவகம்
நசநம் க்லே தயந்தாபோ
நசோஷயதி மாருதம்'

அந்த ஆன்மாவை ஆயுதம் சிதைக்காது!
நெருப்பு எரிக்காது; தண்ணீர் கரைக்கமுடியாது;
காற்று உலர்த்த முடியாது.

—பகவத் கீதை.

பரமஞான வீடு:—

வீடு—விடுபடுவது. பந்தத்தினின்றும் விடுபடுவது வீடு என்க. அது சிறந்த சிவஞானத்தினால் நிகழ்வது.

கருத்துரை

மலைபிளந்த வேலாயுதக்கடவுளே! சிவகுமாரரே! ஒன்றாலும் அழியாத பரமஞானத்தை உபதேசித்தருள்வீர்.

அறமொழிகள்

13. கண்ணுக்குப் பிரதானம் ஒளி. கருத்துக்குப் பிரதானம் அறிவு. பெண்ணுக்குப் பிரதானம் கற்பு. பெரியோர்க்குப் பிரதானம் அறம். மண்ணுக்குப் பிரதானம் விளைவு. மாண்புக்குப் பிரதானம் ஒழுக்கம். பண்ணுக்குப் பிரதானம் இசை. பசிக்குப் பிரதானம் உணவு. இளைஞர்க்குப் பிரதானம் நிதானம். எளியோர்க்குப் பிரதானம் அடக்கம். அன்புக்குப் பிரதானம் அன்பேதான்.

205

உ
திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

கண நாத நாயனர் புராணம்

"கடற் காழிக் கணநாதன் அடியார்க்கு மடியேன்"

சோழவளநாட்டிலே சீரும் சிறப்பு முடையது **சீகாழி.** உமையம்மையாருடைய திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவவதாரஞ் செய்த தலம் அது என்றால் அதன் பெருமை வரம்புடையதோ? உலகமெல்லாம் ஒடுங்கி ஒரே வெள்ளமாக நிற்கும் ஊழிக்காலத்திலும் இத் திருநகர் அழியாமல் தோணிபோல் மிதக்கும் பெருமையுடையது.

ஆன்மாக்களுக்குப் புகலிடமாக அது விளங்குவதால் புகலி எனப்படும். அத் திருப்பதியில் மறையவர் குலத்தில் **கணநாதர்** என்பவர் அவதரித்தார். இவர் சீகாழியில் எழுந்தருளியுள்ள திருத்தோணியப்பரை எப்போதும் வழிபட்டுவந்தார். நாடோறும் தோணியப்பருக்குரிய திருத்தொண்டுகளைப் புரிவார்.

திருத்தொண்டு செய்யும் விருப்புடையவர்களாய் வந்து சேர்கின்ற அடியார்கட்குத் திருத்தொண்டுகளைப் பயிற்றுவைப் பார். திருநந்தனவனம் அமைத்தல், மலர்களை முறைப்படி எடுத்தல், அவற்றை வகை வகையாகத் தொடுத்தல், திருமஞ்சனத்திற்குரிய சாதனங்களை அமைத்தல், திருக்கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், திருமுறைகளை எழுதுதல், படித்தல் முதலிய திருத்தொண்டுகளில், யார்யாருக்கு எதுஎது விருப்பமோ அவ்வப்பணியில் ஈடுபடுமாறு செய்து, அதனை அதனைப் புரியும் விதங்களையும், அதன் பயன்களையும் எடுத்து அவர்கட்கு விளக்கமாகக் கூறி அவர்களை அதில் அன்புடன் ஊக்குவித்து, அதற்குரிய உதவிகளையும் அமைத்துத் தருவார். இவ்வாறு இவர் பலப்பல அடியார்களைப் பெருக்குவார். நல்லறமாகிய இல்லறத்தில் நின்று அடியார்கள் மகிழ வழிபட்டுவந்தார்.

இவ்வாறு ஒழுகிவரும் கணநாத நாயனர், திருஞானசம்பந்தருடைய திருவடிகளை மூன்று காலங்களிலும், மிகுந்த அன்போடு அருச்சனை செய்து வழிபட்டு மகிழ்வார். இந்த வழிபாட்டின் பயனாக இருவினையொப்பு மலபரிபாகம் பெற்று சத்திநிபாதம் எய்தி திருக்கயிலாயஞ் சேர்ந்து அங்குள்ள சிவகணங்கட்குத் தலைவராக விளங்கிப் பேரின்பம் பெற்றனர்.

விளக்கம்

சீகாழி:—

சீகாழி பிரமதேவர் பூசித்தபடியால் **பிரமபுரம்,** இந்திரன் மூங்கில் வடிவாக நின்று தவஞ் செய்தபடியால் **வேணுவனம்**

இப்படி பன்னிரண்டு நாமங்களையுடைய திருத்தலம். இதன் பெருமையை முன்னர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராண விளக்கத்தில் எழுதியிருப்பதைக் காண்க.

திருத்தொண்டு

திருத்தொண்டு செய்வோர் தொண்டர் எனப்படுவார். சிவத்தோடு ஒற்றித்து நின்ற பெரிய ஞானிகளும் தொண்டு புரிவார்கள். சிவபெருமானே சுந்தரரை நோக்கி, "வித்தகம் பேசவேண்டா பணி செய வேண்டும்" என்றுகூறி தொண்டின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

அடியார்கட்குத் தொண்டிலேயுள்ள இனிமை தனிமையானது. தொண்டு செய்து அண்டர் போற்றும் பெருமை பெறுவர். அவர்கள் தொண்டுக்கு இடர் வருங்கால் உயிரையும் விடும் உறுதியுடையவர்கள்.

"கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினர்
இத்திறத்தவர் அன்றியும் எண்ணலார்"

என்று சேக்கிழார் சுவாமிகள் திருக்கூட்டச் சிறப்பில் கூறுகின்றார்.

உயிரினும் உயர்ந்ததாக உன்னி உள்ளம் உவந்து வழுவாது, பெருமையும் தமது அருமையும் குறியாது தொண்டு செய்தல் வேண்டும்; பயன் கருதாதும் புரிதல் வேண்டும்.

கணநாதர்

இவர் தாம் தொண்டு செய்ததோடு அமையாது தொண்டர்கள் பலரை உண்டாக்கி, அவரவர்கள் அன்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொண்டுகளைப் பயிற்றுவித்து, அவர்கள் செய்யுந் தொண்டுகட்கு உரிய சாதனங்களை வழங்கியும், வேறுபல உதவி செய்தும் சிவபுண்ணியம் பெற்றனர்.

நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
    நறுந்துணர் மலர் கொய்வோர்
பல்பணித் தொடை புனைபவர் கொணர் திரு
    மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நண்பக லுந்திரு அலகிட்டுத்
    திருமெழுக் கமைப் போர்கள்
எல்லையில் விளக் கெரிப்பவர் திருமுறை
    எழுதுவோர் வாசிப் போர்.

இத்தகைய திருப்பணிகளில் "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்ற சூத்திரப்படி நந்தனவனப் பணியையே முதன்மையாகக் கூறுகின்றார்.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று திருமூலர் கூறுவதனால், மலரில்லாத வழிபாடு இல்லை. அம்மலரைத் தருவது நந்தனவனம், ஆகவே நந்தனவனம் அமைத்தல் பெருஞ்சிவ புண்ணியமாகும்.

நந்தனவனத்தில் வைகறை நீராடி வெண்ணீறும் கண்மணியும் புனைந்து, பூக் கூடையை இடைக்குக் கீழே தொங்கவிடாமல் உயர்த்திப் பிடித்து, வாய் பேசாமல் சிவசிந்தையுடன் மலர்களை எடுத்து, ஒருபுறஞ் சேமித்து, வகை வகையாக மலர்களை மாலையாகத் தொடுத்து, இறைவனுக்குச் சாத்தி கண்ணாரநீர்மல்கிக் கண்டு களிக்க வேண்டும்.

"உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகை வகை யெடுத்தே தொடாமாலிகா பரணம்
உனதடியினிற் சூடவே நாடு மாதவர்கள்" —திருப்புகழ்.

இவ்வாறு மலர் தொடுத்துத் தந்தவர்கட்கு மேலான சிவகதி கிடைக்கும்.

"துளக்கினன் மலர் தொடுத்தோர் தூயவிண்ணேறலாகும்"
—அப்பர்.

கூற்றுவ நாயனர் புராணம்

"ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக் கோன் அடியேன்"

களந்தை என்ற ஊரிலே **கூற்றுவநாயனர்** என்பவர் வாழ்ந்தார். அவர் சிறந்த தோள்வலியும் வாள்வலியும் மிக்கவர். பகைவர்களுடைய போர்க்களத்தில் வெற்றிபெற்று வீரஞ்செறிந்து விளங்கினர். செஞ்சடைப் பெருமானுடைய அஞ்செழுத்தை இடையறாது நாவில் நவிலும் நலம் படைத்தவர். சிவனடியார்களைக் கண்டால் கரை கடந்த காதலுடன் அவர்கள் பாதமலர் பணிந்து அவர்கட்கு வேண்டிய பணிவிடைகள் புரிவார்.

திருவருளின் வலியால் அரசர்களும் அஞ்சி யொதுங்க மண்ணுலக முற்றும் வென்றார். மலை போன்ற பொற்குவியலையும் சேர்த்தார். தேர் யானை குதிரை காலாள் என்ற நால் வகைச் சேனைகளையும் நிரம்பவும் உடையவராய் வீரச் செயலில் மிக வுயர்ந்து அவர் விளங்குவாராயினர்.

வெற்றியில் மிக்க கூற்றுவநாயனர் வேந்தர்களது போர்கள் பலவற்றிலுஞ் சென்று, தும்பை மாலை சூடிப் போர்செய்து வெற்றி பெற்று வாகைமாலை புனைந்து அரசர்களுடைய வளநாடுகள் எல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு, மணிமகுடம் ஒன்று நீங்கலாக அரசர்க்குரிய ஏனைய சின்னங்களை யெல்லாம் உடையவராகத் திகழ்ந்தார்.

உலகத்தைக் காக்குந் தொழிலை மேற்கொண்ட நாயனர், தில்லையம்பதி சென்று நடராஜப் பெருமானை வழிபடும் அந்தணர்களைப் பணிந்து தனக்கு முடிசூட்டுமாறு வேண்டினர். தில்லைவாழந்தணர்கள், "ஐயா! நாங்கள் சோழர்களது பரம்பரையில் வரும் மன்னர்களுக்கே யன்றி வேறு மற்றவர்கட்குத் திருமுடி சூட்டமாட்டோம்" என்று கூறி மறுத்துவிட்டார்கள். அவ்வாறு மறுத்த அவர்கள், தங்கள் மரபில் வந்த ஒரு குடியினர்பால் அம் மணிமகுடத்தை ஒப்புவித்துக் காவல்புரியும்படி செய்துவிட்டு சேரநாடு சென்று சேரமன்னன்பால் இருந்து வாழ்ந்தார்கள். இதனல் மனந் தளர்வுற்ற கூற்றுவநாயனர் மன்றுளாடும் அம்பலவாணரையே நினைந்து வருந்தினர். அன்றிரவு, "அம்பலவாணு! அருட்கடலே! எளியேனுக்கு முடியாக உமது திருவடியையே சூட்டவேண்டும்" என்று வேண்டித் துயில்புரிந்தார். வேண்டுவார் வேண்டியதை யளிக்கும் விடையவனர் அவருடைய கனவில் தோன்றி அவருடைய சென்னியின்மீது தமது திருவடியைச் சூட்டி யருள்புரிந்தார். கண் விழித்து எழுந்த நாயனர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையுண்டோ? பேரானந்த முற்ருர். இறைவனது திருவடியையே முடியாகக் கொண்டு உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாண்டு வந்தார்.

அற்றை நாளில் இரவின்கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப் பரவும்
பற்று விடாது துயில்வார்க்குக் கனவில் பாத மலரளிக்க
உற்ற அருளால் அவை தாங்கி உலக மெல்லாம் தனிப் புரந்தார்.

அரசாளும் அப்பெருந்திருவாளர் அரசும் செல்வமும் படைத்ததற்குப்பயனுக பூமண்டலத்தில் இறைவர்எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் அத்தனைக்குந் தனித்தனியே நித்திய நைமித்திக வழிபாடுகள் இனிது நிகழப் பெருநிலங்களை அமைத்துச் சிந்தை மகிழ்ந்தார். இவ்வாறு இனிய திருத்தொண்டுகள் பல புரிந்து உலகைக் கருணையுடன் அரசு புரிந்து முடிவில் அரனர் அடிமலர் சேர்ந்து இன்புற்ருர்.

அம்பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பிரானர் புவியில்மகிழ் கோயில் எல்லாம் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெரும்பூசனையியற்றி
உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார்.

விளக்கம்

கூற்றுவனர்

இவர் பகைவருக்கு இயமன் போன்றவராதலின் கூற்றுவனர் என்ற பேர் பெற்றனர். கூறுபடுத்துபவர் — கூற்றுவர்.

பெரிய வீராதி வீரராக இவர் விளங்கினர். அடியார்கள் அன்பில் இணையற்றவராக விளங்குவது போல் வீரத்திலும் மிக்கவராக இருப்பர்.

ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னல் விளம்புந் தகையதோ.

என்று அடியார்களின் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் இனிது கூறியருளினர்.

கூற்றுவனருக்குத் தோள்வலி, வாள்வலி, படைவலி இவைகள் இருந்த காரணத்தால் மட்டும் அவருக்கு வெற்றி வரவில்லை. அருள் வலி ஒன்றே அவர் வெற்றிக்கு மூலகாரணம் என்பதை,

"அருளின் வலியால் அரசொதுங்க
அவனி யெல்லாம் அடிப்படுத்தி"

என்பதனல் அறிக.

மகுடம்

பழங்காலத்தில் சோழமன்னர்களுக்குரிய சிறப்பு மணிமகுடம், சிதம்பரத்தின் கருவூலத்தில் தில்லைவாழந்தணர்கள் காவலில் இருந்த தென்பது இவ்வரலாற்ருல் அறியக்கிடக்கின்றது. உரிய காலத்தில் தில்லைவாழந்தணர்கள் வந்து மணிமகுடம் புனைவர். அவர்கள் சோழமன்னர்கட்கே புனையும் நியதி யுடையராயிருந்தார்கள். அதனல் இவர் அவர்களை மகுடம் புனையுமாறு வேண்டவும், அவர்கள் தங்கள் நியதிக்கு மாருக மகுடம் புனைய உடன்படாது மறுத்தனர். அவ்வாறு மறுத்தபின் இவருடைய ஆட்சியின் கீழ் இருக்க மனமிலராய் அம்மகுடத்தைத் தம்மில் ஒரு குடும்பத்தாரிடம் ஒப்புவித்துவிட்டு சேரமன்னன்பால் சென்று வாழ்ந்தார்கள்.

நீதியும் நெறியும் நிறைந்த கூற்றுவனர் அவர்களை நெருக்கியும் இடர்படுத்தியும் பலாத்காரமாக அம் மகுடத்தைப் பெற முயன்ருரில்லை. அதனல் அவருடைய அருளாட்சியும்,குடிகளுக்குள்ள உரிமையும் நன்கு புலனுகின்றன.

அடியே முடியாகக் கொள்ளல்;—

இறைவனுடைய அடிமலரையே முடியாகப் புனையுமாறு இவர் வேண்ட இறைவர் அவ்வாறு அருளினர். இதன் உட்பொருள், இறைவனது அடிஞானத்தில் அடங்கி ஜீவபோதமின்றி தன் செயலின்றி சிவமயமாக இருந்தார் என்பது.

இராமாயணத்தில் பண்புமிக்க பரதர் அண்ணலுடைய பாதுகையைத் தனக்கு முடியாகக்கொண்டார் என்ற வரலாறும் இந்த உண்மையைக் காட்டுகின்றது.

ஆலயப்பணி

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்பது பயனியல் கூறும் பன்னிரண்டாவது சூத்திரத்தின் உறுதியாய இறுதி வரியாகும். இதனால் மக்கள் என்றும் குன்றாத அன்புடன் ஆலயவழிபாடு செய்யவேண்டும். சிவ ஞானிகளும் செய்ய வேண்டும். சுருங்கக்கூறினால் உடல்நினைவு இருக்கும்வரை செய்தேதீரவேண்டும்.

இதற்கு அரசர்கள் துணைபுரியவேண்டும். அரசாங்கம் வெறும் வரிவசூல் செய்து வண்டிபோகும் வழிகளைச் செப்பனிடுஞ் செயலுடன் மட்டும் அமையக் கூடாது. உயிர் ஈடேறும் அருள்வழியையும் அரசாங்கம் பாதுகாக்கவேண்டும். அவ்வண்ணம் முன்னிருந்த அரசியல்கள் அமைந்திருந்தன.

இவர் எங்குமுள்ள ஆலயங்கள் அத்தனையும் பழுது பார்த்தும் அதற்குரிய பொது சிறப்பு வகையான வழிபாடுகள் முறையே நிகழச் செய்தும் அறப்பணி செய்தார் என்றதனால் மன்னர்கள் முதற்கடமை இதுவே என்பது தெற்றெனத் தெளிவாகின்றது.

அன்று அரசர்கள் புதுக்கிய ஆலயங்களே இன்று நமது தென்னாட்டின் சிற்பக் கலையையும் தெய்வ பக்தியையும் மேனாட்டாரும் அறிந்து வியக்குமாறு வீறு கொண்டு நிற்கின்றன. அக்காலத்திருந்த அரசர் வாழ்ந்த அரண்மனையோ அவர் புனைந்திருந்த அணிகலன்களோ இல்லை. அவர்கள் புதுக்கிய ஆலயங்கள் அழியாது அவர்களது புகழை நிலைநிறுத்துகின்றன. ஆதலால் இக்காலத்துப் பொது மக்கள் ஆலயத்தைப் பேணி அருள் பெறுதல்வேண்டும்.

அற மொழிகள்

14. "ங"கரம் என்ற எழுத்து அதிகப் பிரயோசனப் படாவிட்டாலும் எழுத்துக்களில் ஒன்றாகப் பாவிக்கப்பட்டு சிலாகிக்கப் படுவது போல், மனிதர்களில் பிரயோசன மற்றவர்களாயினும் அவர்கள் நல்வழிப்பட நாம் அவர்களை கௌரவிக்க வேண்டும்.

15. சன்மார்க்க சங்கங்கள் எங்கும் பரவி தொண்டாற்றி வரின் துன்மார்க்க சங்கங்கள் தானாக மறையும். தீபவொளி பரவினால் இருட்டுத் தானாக மறைகின்றது.

உ

முருகா

கற்பு

பொன்னம்மாள்

(௧௯௨ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் மாலை ஏழுமணி. பொன்னம்மாள் கோயிலுக்குப் போய் திரும்பி வந்துகொண்டிருந்தாள். வழியில் ஒரு பை கிடந்தது. எடுத்தாள். அது பணப்பை. பாரமாக இருந்தது. முருகன் தங்கள் வறுமை நோய் தீரத் தந்தனர் போலும் என்று எண்ணி அதனைத் தூக்க முடியாதபடி தூக்கிக் கொண்டு வீட்டில் கொணர்ந்து சேர்த்தாள். கணவனிடம் காட்டினாள். "இது யாருடையதோ? உடையவன் எப்படி வருந்துவானோ? பிறர் பொருளுக்கு ஆசை வைக்கக் கூடாது. ஆனால் இதை வெளியே சொன்னால் யாரும் தம்முடையது என்று கூறக் கூடும். பத்திரமாக வைத்திருப்போம். உடையவர்கள் இன்னார் என்று தெரிந்தால் கொண்டுபோய் கொடுப்போம்" என்று இருவரும் பேசி முடிவுகட்டினார்கள். தங்களுக்கு இருந்த வறுமையையும் பொருள்படுத்தாமல் அதை அவிழ்த்து ஒன்று இரண்டு நாணயமாவது எடுத்துச் செலவழித்தார்களில்லை. "வறிஞர்க் கழகு வறுமையில் செம்மை" என்ற நன்னெறியில் நின்றார்கள்.

அந்த ஊரில் ஒரு கொடாக்கண்டன். பரமலோபி; சூதும் வாதும் புரிந்து பொருள் ஈட்டுவதையே விரதமாகக் கொண்டவன். அவன் பேர் **காளப்ப செட்டி**; அவனிடம் ஏராளமான செல்வம் உண்டு; மேலும் மேலும் அல்வழியில் பொருளைச் சேர்த்து நல்வழி யறியாது மண்ணுக்குச் சுமையாக வாழ்ந்தான். அவன் அயலூரில் போய் வட்டிக்குப் பொருளைக் கொடுத்து வாங்குவான். அதிக வட்டி போட்டு ஏழைகள் உதிரத்தை உறிஞ்சிவிடுவான். வழக்கம்போல் வண்டியில் வந்த அவனுடைய பணப்பை வண்டியினின்று நழுவி விழுந்துவிட்டது. அதில் ஆயிரத்து நான்கு நூறு வராகன்கள் இருந்தன. வீட்டிற்குச் சென்றவுடன் பணப்பையை வண்டியில் காணாது அலறினான். உலகமே உருண்டுவிட்டதுபோல் எண்ணி இங்குமங்கும் அலைந்தான். பணப்பை கிடைக்கவில்லை. அன்றிரவெல்லாம் உறக்கமின்றி உருண்டான்; மருண்டான். பொழுது விடிந்தது. தன் பணப்பை தவறிவிட்டதாகவும், அதைக் கண்டு எடுத்தவர்கள் கொண்டுவந்து கொடுத்தால் நூறு வராகன் இனும் தருவதாகவும் பறை சாற்றினான். "காளப்ப செட்டியின் பணப்பை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் அவரிடம் கொடுத்தால் நூறு வராகன் இனும் தருவார்" என்ற தண்டோரா சத்தத்தைப் புருஷோத்தமனும் பொன்னம்மாளும் கேட்டார்கள்.

பணப்பையை எடுத்துக்கொண்டு இருவரும் காளப்ப செட்டி வீட்டிற்குக் கொண்டுபோய் அவன் முன் வைத்தார்கள். பொன்னம்மாள், "ஐயா! நான் நேற்று மாலை கோயிலுக்குப் போய் திரும்பிவரும்போது இப் பை வழியில் கிடந்தது. உடையவர்கள் கேட்டால் தரலாம் என்று வைத்திருந்தோம். இப்போது தங்களுடையது என்று அறிகின்றோம். ஆகவே பையைத் தங்களிடம் சேர்த்தோம். தாங்கள் அறிவித்தவாறு நூறு வராகனைக் கொடும். அதைக் கொண்டு எங்கள் வறுமைக் கனலையணைப்போம்" என்றாள்.

காளப்ப செட்டிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மாண்ட வுயிர் மீண்டது போல் இருந்தது. "வழியில் கண்டெடுத்ததைக் கொண்டுவந்து கொடுத்த இவர்கள் சுத்த உதவாக்கரைகள். பணத்தின் அருமை தெரியாத அசடுகள்" என்று எண்ணினன். பையை அவிழ்த்து எண்ணிப்பார்த்தான். சரியாக ஆயிரத்து நான்கு நூறு வராகன் இருந்தது. பழையபடியே அதனைப் பையில் போட்டுக்கட்டி உள்ளே வைத்துவிட்டு "சரி சரி, போய்வாருங்கள்" என்றான்.

புருஷோத்தமன், "தாங்கள் தருவதாகச் சொன்ன நூறு வராகனைத் தாருங்கள்" என்றான். "ஓய்! உனக்குப் புத்தியிருக்கின்றதா? பெரிய மோசக்காரனாக இருக்கின்றனையே. பையில் ஆயிரத்து ஐந்து நூறு வராகன் இருந்தது. இப்போது எண்ணிப்பார்த்தேன். ஆயிரத்து நான்குநூறு வராகன் தான் இருக்கின்றது. எனவே நூறு வராகனை நீங்களே எடுத்துக்கொண்டீர்கள் என்று விளங்குகின்றது. நீங்களாக நூறு வராகன் எடுத்துக்கொண்ட பிறகு நான் வேறு நூறு வராகன் தரவேண்டுமா? நன்றாக இருக்கின்றது உங்கள் நியாயம். அப்படியெல்லாம் என்னை ஏமாற்ற உங்களால் முடியாது. மூச்சு பேச்சுக் காட்டாமல் வெளியே போங்கள்" என்று கூறிக் கடிந்தான்.

பொன்னம்மாள், "ஐயா! ஏன் இப்படி அநியாயமாகப் பேசுகின்றீர். நாங்கள் இந்தப் பையை எங்கும் நிறைந்த கடவுள் சாட்சியாக அவிழ்க்கவேயில்லை. அப்படி உம்மை யறியாமல் எடுக்கக் கூடிய ஆசையோ வஞ்சகமோ எங்களிடம் இருக்குமாயின் இந்தப்பையை உம்மிடம் தந்துவிடும் எண்ணமே எமக்கு உண்டாகாதல்லவா? சத்தியம் தவறிப் பேசாதீர். என் கணவனுரை ஏமாற்றுக்காரன் என்று கூறுதீர். கடவுள் உமக்குத் துணைசெய்யமாட்டார். பொதுவாக நூறு வராகன் தர மனம் இல்லையென்று சொல்லும். நாங்கள் போய்விடுகின்றோம். அபாண்டமாக நாங்கள் நூறு வராகன் எடுத்துக் கொண்டதாகப் பொய் கூறி பழிபாவத்திற்கு ஆளாகாதீர். பொருள் அழியக் கூடியது. சத்தியம் ஒரு பொழுதும் அழி

யாதது. உம்மைப் போன்ற தனவந்தர்கள் இவ்வாறு அநீதியாக நடந்தால், மற்றவர்கள் எப்படி நடப்பார்கள்?" என்று கண்ணீர் சிந்திய வண்ணம் கூறினாள்.

காளப்பன், "அடி! மாயக்கள்ளி! எங்கள் வீட்டில் வந்து ஒப்பாரிவைத்து அழுகின்றாயா? நான் பொய்யா பேசுகின்றேன்? நீங்கள் அரிச்சந்திரன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாழ்கின்றீர்களோ? வீணே எனக்குக் கோபத்தை மூட்டிக் கொடுமைக்கு ஆளாகாதீர்கள். இனி ஒரு கணமும் இங்கே நிற்கக் கூடாது. போய்விடுங்கள்" என்று சினந்தான்.

புருஷோத்தமன், "ஓய் செட்டியாரே! உத்தமியாகிய இவளை அடி என்று அழைக்க உனக்கு என்ன உரிமை யுண்டு? உன் வாய்த்துடுக்கை யடக்கு" என்றான். காளப்பன் எழுந்து ஓங்கி பளார் பளார் என்று கன்னத்தில் அறைந்து இருவரையுங் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டான்.

அத்தம்பதிகள் அப்படியே நியாயமன்றஞ் சென்று நீதிபதியிடம் நிகழ்ந்ததைக் கூறி முறையிட்டார்கள். நீதிபதி சேவகர்களை அனுப்பி காளப்பச் செட்டியை நீதிமன்றத்திற்கு அழைத்தார். அப் பணப்பையும் கொணர்வித்தார்.

நீதிபதி வாதிகளாகிய புருஷோத்தமனையும் பொன்னம்மாளையும் பார்த்து, "உங்கள் வாக்குமூலத்தைக் கூறுங்கள்" என்றார்.

பொன்னம்மாள், "அண்ணலே! நான் நேற்று மாலை சுமார் ஏழு மணிக்குக் கோயிலுக்குப்போய் திரும்பும்போது இப்பை வழியில் கிடந்தது. எடுத்துக்கொண்டுபோய் வீட்டில் என் கணவனுக்குக் காட்டினேன். அவர் நமக்கு வறுமையிருந்தாலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. உடையவர் இன்னார் என்று அறிந்தால் கொடுத்துவிடலாம் என்று கூறினார். பிறகு பையை எடுத்தவர் கொண்டுவந்து கொடுத்தால் நூறு வராகன் தருவதாகத் தண்டோரா போடப்பட்டது. அதைக் கேட்ட நாங்கள் இப் பணப்பையை இவரிடம் கொடுத்து, தருவதாகச் சொன்ன நூறு வராகனைக் கேட்டோம். அதற்கு அவர் என் கணவனுரையும் என்னையும் வைதும் அடித்தும் அவமானப்படுத்தினார்" என்றாள்.

நீதிபதி பிரதிவாதி காளப்ப செட்டியாரைப் பார்த்து, "உமது வாக்குமூலத்தைக் கூறும்" என்றார்.

காளப்ப செட்டியார், "ஐயா! நான் பெரிய செல்வவந்தன்; என்னைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அற்ப விஷயத்திற்கெல்லாம் பொய் சொல்லவேண்டிய அவசியமே கிடையாது.

என்னுடைய பணப்பை வண்டியினின்றும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் கொடுத்தால் நூறுவராகன் தருவதாக நான் தண்டோரா அடித்தது உண்மைதான். என் பையில் ஆயிரத்து ஐந்துநூறு வராகன் இருந்தது. இப்போது எண்ணிப் பார்த்தேன். ஆயிரத்து நான்கு நூறு வராகன்தான் இருக்கின்றது. இவர்களே நூறு வராகன் எடுத்துக்கொண்டு, மறுபடியும் என்னை நூறு வராகன் தருமாறு வம்பு பண்ணுகின்றார்கள். என்னைப் பொய் சொல்வதாகவும் கடவுள் கருணை துணை புரியாது என்றும் கூறினார்கள். அதனால் எனக்குக் கோபம் மூண்டது. ஆகவே இவர்கட்கு நான் பணந் தரவேண்டியதில்லை. இது சத்தியம்'' என்றான்.

நீதிபதி சற்றுநேரம் சிந்தித்தார். பின்னர் அவர், புருஷோத்தமனையும் பொன்னம்மாளையும் பார்த்துக் கூறுகின்றார்: "ஐயா! அம்மா! அன்பர் காளப்ப செட்டியார் பெரிய மனிதர். அவர் பெருஞ் செல்வம் படைத்தவர். அற்பமான நூறு வராகன் பொருட்டுப் பொய் சொல்லமாட்டார். அவர் விஷயத்தில் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கை யேற்படுகின்றது. ஆகவே சத்ய சந்தர். அவர் சொன்னபடி அவர் பையில் ஆயிரத்து ஐந்துநூறு வராகன் இருந்தது என்பதில் அணுவளவும் சந்தேகம் கிடையாது.

"காளப்ப செட்டியாரே! உமது வார்த்தை நூற்றுக்கு நூறும் உண்மைதான். உம்முடையசொல்லில் எனக்குச் சந்தேகமில்லை. ஆகவே உம்முடைய பையில் ஆயிரத்து ஐந்துநூறு வராகன் இருந்தது என்பதும் உண்மைதான்.

இவர்கள் வாக்கு மூலத்தினால் இவர்கள் பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவர்கள் என்றும் நான் நம்புகின்றேன். அப்படி ஆசைப்படுவார்களாயின் இப்பையை உம்மிடம் அவர்களே வலியவந்து கொடுத்திருக்கமாட்டார்கள். இவர்கள் சொல்லும் செயலும் ஒத்து நடப்பவர்கள். உத்தம குணம் படைத்தவர்கள். ஆகவே இவர்கள் பையிலிருந்து நூறு வராகன் எடுத்துக் கொண்டார்கள் என்பதை நான் நம்ப மாட்டேன். நூறுவராகனை எடுக்கக்கூடிய பணத்தாசை இவர்களிடம் இருக்குமாயின் முழுவதுமே எடுத்துக்கொண்டிருப்பார்கள். பணப்பையை அவர்களாகவே கொண்டுவந்து கொடுத்தபடியால் இவர்கள் உத்தமர்கள்.

நீரும் பொய் சொல்லமாட்டீர். உமது பையில் ஆயிரத்து ஐந்துநூறு வராகன் இருந்தது என்பது உண்மைதான். ஆகவே இந்த இரண்டையும் நன்கு ஆராய்ந்து பார்த்தேன். இந்தப் பை உம்முடையது அன்று. உம்முடையதாயின் ஆயிரத்து ஐந்துநூறு வராகன் இருந்திருக்கவேண்டும். இதில் ஆயிரத்து நான்குநூறு வராகனே இருப்பதனால் இப் பை

வேறு யாரோ தவறிவிட்டிருப்பார்கள். ஆகவே ஆயிரத்து ஐந்துநூறு வராகன் அடங்கிய பை கிடைக்கின்றபோது அதை நீர் பெற்றுக்கொள்ளும். இப்பை உம்முடையது அன்று என்று நிச்சயமாக நான் முடிவு செய்ததபடியால் நீர் போய்வாரும்.

"அம்மா! இப்பை இச்செட்டியாருடைய தன்று. இதனை நீங்களே கொண்டு போய் வைத்திருங்கள். இதற்கு உரியவர் அதற்குரிய காரணத்துடன் கேட்கும்போது இதைப் பற்றிச் சிந்திக்கலாம். அதுவரை உரியவர் தெரியாமையால் இதனை நீங்களே வைத்து அநுபவித்துக்கொள்ளுங்கள். பணப்பையுடன் நீங்கள் போய்வாருங்கள்" என்று தீர்ப்பு கூறினர்.

இந்தத் தீர்ப்பைக் கேட்ட காளப்ப செட்டி மிக்க வருத்தத்துடன் தனது துர்ப்புத்திக்குத் தக்க தண்டனை யென்று பேசாமல் திரும்பிப் போனன்.

பணப்பையுடன் புருஷோத்தமனும் பொன்னம்மாளும் வீட்டிற்குப்போய் சிறிது நிலம் வாங்கிக் கொண்டு உழவுத் தொழில் செய்து வறுமை தீர்ந்து இனிது வாழ்ந்தார்கள்.

அறமொழிகள்

16. ஞானியை இறந்த பின்னும் இறவாதவராக எண்ணி உலகம் போற்றுகிறது. தனக்கென வாழ்ந்த தனவந்தனையும், அரசியல் தலைவனையும், மற்றும் இது போன்றவர்களையும் அவர்கள் உள்ளபோதே தூற்றுகிறது.

17. டம்பமாய்ப் பேசுபவர்களையும் அல்லது வாழ்பவர்களையும் உலகம் இழிவாக மதிக்கின்றது என்பதை அவர்கள் அறிவதில்லை. காரணம் அவர்கட்குப் பொய் கௌரவத்தி லுள்ள மோகந்தான்.

18. பணந் தேடவேண்டும். ஆனல் அத்துடன் அறமுந் தேடவேண்டும். அநியாய வழிகளில் பணம் தேடுவது இகத்துக்கும் இழிவு. பரத்துக்கும் பழி. எத்தனைநாள் வாழ்ந்தாலும் அறமே இன்பந்தானே. பண மூட்டையைப் பெருக்க முயன்று பாவமூட்டையைப் பெருக்குவது கூடாதல்லவா?

19. தருமமே தொடர்ந்து வந்து துணைசெய்யும். என்றைக்கும் பிறருக்கு உபகாரியாக இரு. மரம், கனியும் நிழலும் கொடுத்து உபகரிக்கின்றது. மண் விளைவை நல்குகின்றது. அஃறிணையான கைகாட்டி மரம் கூட வழிகாட்டி நின்று உதவுகின்றது. மனிதனுக்கு மட்டும் ஏன் இந்த நற்குணங்கள் நினைவில் இருப்பதில்லை? மரத்தையும், மண்ணையும் விடவா மனிதன் மட்டமாயிருக்கவேண்டும்?

216

உ
முருகா

உலக ஆசையில் ஓயாது உழலும் நெஞ்சே!

(K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி.)

அன்புடைய நெஞ்சே!

உனக்குப் பல்கோடி வந்தனம். கொஞ்சம் என்னிடத்தில் தயை வைத்து சொல்வதைக் கேட்பாய்.

மாலையில் உள்ள மலரிலிருந்து காலம் செல்லச் செல்ல ஒவ்வொரு இதழும் உதிர்வதுபோல், நெஞ்சே! உன்னிடமிருக்கும் ஒவ்வொரு ஆசையும் உதிரத்தான் வேண்டும். அப்படியிருக்க ஏன் இந்த உலக ஆசை உன்னை விடவில்லை? வீணில் அப்பாழ் எண்ணத்திலே காலத்தைச் செலவழிக்கிறாயே! பொய்யுடை வாழ்வில் உய்யும் நெறி சைவநெறியன்றோ! அதை நாடி வருவாய் என்று உன்னை வேண்டி யழைத்தால், வாராதொழிகின்றாய். மயக்கத்திலே தோய்கின்றாய்.

நல்ல அமுது என்று விரைந்து பொறிவழியில் செல்லும் உன்னிடத்தே அது பொல்லாதது; விரும்பாதே யென்றால் நஞ்சையுண்ணுவதுபோல் நலிகின்றாய். உன் விருப்பப்படி ஒரு நிலையில் நில்லாது ஓடுகின்றாய். விடுபடாத உன் இச்சையின் வழியே ஆடுகின்றாய். மீண்டும் வேறொன்றை நாடுகின்றாய். திரும்ப அதை விட்டு ஒரு வழியாய் மீள்கின்றாய். கொடுமை வழியில் செல்வதால் முடிவில் தாழ்மையே பரிசாகத் தருகின்றாய்.

நெய் குடத்தைப் பற்றி நிற்கும் எறும்புபோன்று, இப்பொய்க் கடத்தைப் பெற்றிருக்கும் என்னுடைய அற்ப வாழ்வில் எண்ணற்ற துன்ப அலைகளானது வந்து பொருந்த; அத்துன்பத்திடையே என்னை அலக்கழிக்கின்றாய். மீட்டும் மீட்டும் அதனிடையே என்னை அமுத்திவிடுகிறாய்.

கிளைக்குக் கிளை தாவுகின்ற குரங்குபோன்று, ஒன்றை மறந்து ஒன்றை நினைக்கின்றாய். அன்றி அதை மறைக்கின்றாய். பின்னால் அதை நினைந்து நலிகின்றாய்.

இப்படி ஏன் வீணில் அழிகின்றாய். இறைவனது திருவடியைப்பற்றி வாழ் என்று இதமாகக் கூறினாலும் என் சொல் கடந்து பல பல எண்ணி நிலையிழந்து திரிகின்றாய்.

என்னிடம் கொஞ்சமும் இரக்கங் காட்டாது உழல்கின்ற உன்னை திண்மை பெற்ற கல்லென்றாலும் கரணங் கலந்தறியாத அதுவும் என்சொல் கடவாது. வலிவு படைத்த இரும்பென்று உன்னைக்கூற நினைத்தால், அதுவும் கொல்லன் குறிப்பைவிட்டு கோணாது.

இல்லை, தொல்லை தரும் குரங்கென்றுதான் கூறவேண்டும். அப்படியானால் அக் குரங்கும் கோல் கண்டால் ஆள் சொல்வது போல் ஆடச்செய்யுமே யல்லாது ஓடச் செய்யாதே!

அல்லது உலகினர் தூற்றும் அலகையோ? "ஐயோ"! அந்த பேயும் "ஐந்தெழுத்தைக் கூறும்" சிந்தை படைத்தவரைப் பிடியாதே!

கண்டவரைக் கவ்வுகின்ற நாய்தானே நீ? அதுவும் தன்னைக் கொண்டவரைக் கண்டால் குழையுமே தவிர குலையாதே!

இல்லை; இல்லை! இவைகளெல்லாம் உனக்குக் கொஞ்சமும் பொருந்தாது. எல்லாரும் அஞ்சுகின்ற பொல்லாத புலியே உனக்கு முற்றிலும் சாலும். அட! அதுகூட ஒருவனுக்கு வயப் பட்டால் எதிராதே!

பின், மதங்கொண்ட களிறோ நீ? அதுவும் பாகன் அங்கையில் உள்ள அங்குசத்தைக் காணில் அடங்கி ஒடுங்கிவிடுமே!

இவையல்லாத மற்றை விலங்கினங்கள் என்று உன்னைக் கூற நினைப்பதற்கும் முடிய வில்லை. காரணம்: மன்னன் வாழும் நாட்டில் அதற்கு வாழ்வு ஏது? அன்றி செயல் தான் உண்டோ?

பின்னை இனி என்னவென்றுதான் உன்னைக் கூறுவது! பொல்லாத நெஞ்சே! என் சொல்லைத் தள்ளாதபடி நிற்பாயேயாகில் உன்னை மாற்றுயர்ந்த பொன் என்பேன். என் வழி நில்லாயேயானால் உன் வழி பொய்யானது என்று அறுதியிட்டு உறுதி கூறுவேன். உனது செயலும் பொய் என்பேன். அதனால் உனக்கு விளைவதும் பொய் என்பேன். உனது அறிவும் பொய்யென்று மெய்ப்படுத்துவேன். உன் கடமும் பொய்; இங்கு உன் தவமும் பொய்; நிலை யில்லாத நின் நிலையும் பொய்; அன்றி நிலைபெறாத நீயும் பொய்; எல்லாம் பொய்யே என்று வாய்மையின் பேரால் போராடி வெற்றி பெறுவேன்.

ஆம், உன் நிலை இதுதான். வீணில் என்னை ஏன் இம் மாய வாழ்க்கையில் வாது புரிந்து மயக்கத்தைத் தருகின்றாய். கெட்டவழியில் செல்லும் நீ என் சொல்லைத் தட்டாதபடி கேட்பாயேயாகில், அழுந்திய இடருள் நீங்கி ஆண்டவனை அடையும் வழியைக் காணலாம். ஆகையால் என் சொல்லுக்குச் செவி சாய்ப்பாய்; அழிவில்லாத இன்பம் பெறலாம்.

———

218

உ

முருகா

கந்தவேளும், கலிவெண்பாவும்

(அன்பன் மு. பெருமாள்)

அறம் குறைந்து அல்லவை பெருகும்போதெல்லாம், அறவோர்கள் அடக்கப்பட்டு இன்னல்படும்போதெல்லாம், சமயம் சிதைக்கப்பட்டு சன்மார்க்கம் குன்றும்போதெல்லாம், சுரராட்சி சுருங்கி, அசுரராட்சி அலரும்போதெல்லாம், ஆண்டவன் தோற்றம் அகிலத்தில் வெளிப்பட்டு அறம் வழங்குவது என்ற நியதி தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் ஒரு அருஞ்செயலாகும். புராண வரலாறு இதைத்தானே பேசுகின்றது. எழிலான கீதை வாக்கும் இதை மெய்ப்பிக்கின்றதல்லவா?

எனவே சூராதி அவுணர் ஆட்சி எங்கும் பரவி இன்னல்கள் விளைத்தபோது, தேவ சக்தியாலும் அதை மாற்றியமைக்க இயலாது இயம்பவொண்ணாத இன்னல்கள் பெருகியது. காரணம் சூராதியர்கள் பெற்ற தவ ஆற்றல்கள் அத்துணை மகத்தானதாக யிருந்தன. எனவே அது போழ்து அறவோரைக் காக்கவும், அறத்தை நிலைபெறு படுத்தவும் ஆண்டவன் தோற்றம், அஃதாவது அருவமாய் யாண்டும் பரவி வியாபித்திருந்த அருட்சோதி ஒரு திருவுருவங் கொண்டு உலகிடை வெளிப்பட்டது.

அநாதியான அந்த அருட்சுடர், பிறப்பு இறப்பு கடந்த அந்த பேரருட்சுடர்; உருவங்கடந்து உலகம் யாவற்றிலும் ஊடுருவி நின்ற அந்த உயர்சுடர்; ஒன்ருய் பலவாய் விளங்கும் ஒப்பற்ற ஆற்றல் வாய்ந்த அந்த ஒண்சுடர், மெய்ஞ்ஞானத்தின் கருவூலமாய் விளங்கும் அந்த மெய்ச்சுடர்; பேர் ஊர் குணம் குறி யாவும் அற்ற அந்த பிரம்மச்சுடர்; வேண்டுதல் வேண்டாமை யற்ற அந்த விழுமிய சுடர்; தனக்குவமையில்லாது தானே இயங்கும் அந்தத் தனிப்பரஞ்சுடர், அகலம் நீளம் யாதாலும் ஒருவராலும் ஆராய அரிதாய் நிற்கும் அந்த அருஞ்சுடர்; அகரமுதல் ஐம்பத்தோரட்சரமும் அகில கலைகளும், அனந்த தத்துவமும் தன்னுள்ளடக்கி விளங்கும் அருட்கோலமான அந்த சுடர், வாசித்துக் காண வொண்ணுததும், பூசித்துக் கூட வொண்ணுததும், வாய்விட்டுப் பேச வொண்ணுததுமான அந்த அருட்சுடர்; ஓல மறைகள் ஓதும் ஒரு பொருளாய் நின்ற அந்த ஒப்பற்றச்சுடர்; அறிவாலறிந்து, அன்பாலுகந்து அவன் அருளிற் கலந்து இறைஞ்சும் அடியார்களது இடர்தீர்க்க, ஆதியும் அந்தமுமில்லா அந்த அருட்பிழம்பு திரண்டு அருளொழுகும் ஆறு முகங்களும் பன்னிரண்டு தோள்களுமாய் ஒப்பற்ற திருமேனி கொண்டு உலகம் உய்ய உதித்தனன்.

யார் உதித்தனன்? ஒரு திருமுருகன். பிறப்பதற்கு முன்னே பெயருண்டா! குழந்தை பிறந்தது என்று கூறுவது உலக வழக்கம். பின்னர் செய்யவேண்டிய சடங்குகளை முடித்து தொட்டிலிலிட்டு பெயர் வைப்பது உலகங் கண்ட முறையாகும். இஃதே தேவர்கட்கும், மாமுனிவர்கட்கும் மால் பிரம்மாதி இந்திரர்கட்கும் பொருந்தும். மூவுருவும் ஒருருவாய் முகிழ்க்கும் எங்கள் ஆண்டவனை முருகப்பெருமான் ஒருவனுக்கே இந்த சொற்பிரயோகம் பிறந்துள்ளது. கச்சியப்பர் கருணைவாக் கல்லவா? உள்ளதுதானே வெளியாகும். முருகனை யாண்டும் என்றும் நிலவியிருந்த அந்த மூலச்சுடரான பெருங் கருணைப் பெருமான் உலகம் உய்ய உதித்தனன்.

இங்கு உலகம் என்ற சொல் மக்களாகிய நாம் வாழும் பூவுலகத்துக்கு மட்டும் பொருந்தாது. கீழும் மேலும் கிடக்கும் பதினான்கு உலகங்கட்கும் பொருந்தும். "உலகம்" என்ற சொல் பதினான்கு உலகத்துக்கும் உரிய ஒரு பொதுச் சொல்லாகும். எனவே உலகம் உய்ய என்ற பிரயோகம் அகில உலகங்களும் உய்ய என்ற கருத்தில்தான் தொக்கி நிற்கின்றது.

பேர் ஊர் பிறப்பு இறப்பு அற்ற பேராயிரங்கொண்ட பெருமானுக்கு "முருகன்" என்ற தமிழ்ப் பெயர் உள்ளதே அதை எண்ணும்போதும், சொல்லும் போதும், பிறர் சொல்ல கேட்கும்போதும் என்னதான் உருக்கமும் ஆனந்தமும் பொங்குகின்றது! ஆஹா! அதை அநுபவித்த அன்பர்கட்கன்றோ அந்த இன்பம் புலனாகும். "முருகன்" என்ற சொல்லுக்கு அகராதிப்படி அழகு, இளமை, தெய்வத்தன்மை என்ற கருத்து பொருந்தியிருப்பதுடன், "முருகா" என்ற சொல்லை உச்சரிக்கும்போதெல்லாம் தெய்விகத் தன்மை உள்ளத்தில் ஊற்றெடுத்து உடற் கூச்செறிந்து, உரோமம் சிலிர்த்து உள்ளங் கரைந்து மெய்மறக்கச் செய்கின்றது. கருது மடியார்கள் கருத்தில் விளையாடும் கந்தவேள் பெருமானை "முருகா" என்று வாய் குளிர, மனங்குளிர, செவிகுளிர, உயிர்குளிர, உச்சரிக்கும் உயரிய பேறு மக்களாகிய நமக்கு வாய்த்த ஒரு சிறந்த நற்பேறாகும். நமது சஞ்சித வினை சரிந்து குஞ்சிதபாதனருளில் கூட்டுவிக்கும் பெருமானுக்கு "முருகன்" என்ற நாமம் எவ்வளவு பொருத்தமாகவும், கருத்து நிறைந்ததாகவும், அழகாகவும் அமைந்துள்ளது என்பதை எண்ணும்போதெல்லாம் எண்ணில் உவகை எழுந்து இறையருளில் திளைக்கச் செய்கின்றது.

மேலே கூறும் கருத்துக்களைப் பின்வரும் கந்தபுராணப் பாடல் விளக்கமாய் விளக்குகின்றது.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

இதே கருத்தைக் கந்தர் கலிவெண்பாவும் கவினுறக் கூறுகின்றது.

"பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு
நாதமும் நாதாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு
அந்தங் கடந்தநித் தியானந்த போதமாய்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமு மொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—"

என்றும்,

"—யேகத்
தருவு மருவு முருவருவு மாகிப்
பருவ் வடிவம் பலவாய்—இருண்மலத்துள்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்து—"

என்றும் பெருமானது பெருந் தோற்றத்தைப் பெரும் அழகாக விளக்கியுள்ளார், செந்தூர் வேலவர் சீரருள் பெற்ற செங்காப் போதர் குமரகுருபரர்.

புண்ணியமும், புனிதமும் நிறைந்த அந்த பொன்னுனை நாள்தான் கந்தசஷ்டியாகும். திருமுருகப் பெருமானது திருவிளையாடல்களை விவரிக்கும் வரலாறுதான் கந்த புராணம். அது மிகப் பெரிய வரலாறு. கந்த புராணம் கழருத வரலாறு வேறு எந்த புராணமும் இயம்பப் போவதில்லை. என்ற அளவுக்கு விரிந்து விளங்குகின்றது. இந்த மிகப் பெரிய வரலாற்றின் சாராம்சத்தைத்தான் சுருக்கமான முறையில் தத்துவம் தளராது, தெய்வமணங் குன்றாது மெத்த மெத்த அழகாக முறையே முருகப் பெருமான் மெய்ச் சக்தியைச் சரங்கோத்தாப்போல் செப்புகின்றது "கந்தர் கலிவெண்பா". கந்தவேள் பெருமான்மீது துதிப் பாடல்களாக வெளிவந்துள்ள நூல்களில், பெருமானது வரலாற்றை முறையாக வகுத்து தொகுத்து கனிமதுரமெனக் கொடுப்பது "கந்தர்கலி வெண்பாவே". கந்தசஷ்டி, கிருத்திகை, முதலான விரத நாட்களில் கந்தபுராணத்தைப் பாராயணஞ் செய்ய ஓய்வில்லாத அன்பர்கள்'கந்தர் கலிவெண்பாவை'ப் பாராயணஞ் செய்யலாம்.

ஏனெனின் கந்தபுராணம் விவரிக்கும் கந்தவேள் பெருமானது போராற்றல்கள் யாவையும் சுருக்கிக் கந்தர்கலி வெண்பா கூறுகின்றது.

அலைவாயுகந்த அருட்பெருங்கடலான திருச்செந்தூர் அண்ணலார் ஆசியும், அருள்வாக்கும் பெறவேண்டி, ஐந்தொன்பது நாட்களாய் பெற்ருேரின் பெருமுயற்சியால் பெருந் தவமாற்றிய அருள்ஞானக் குழவியாம் குமரகுருபரரின் அருள்வாக்கன்ருே "கந்தர் கலிவெண்பா". சின்னஞ் சிறு வயதில் செந்திலாண்டவர் குமரகுருபரரைத் தடுத்தாட் கொண்டு, அவர்தம் செந்நாவில் "கந்தர் கலிவெண்பாவை" வெளியாக்கி அன்பர்கட்கு அருள்வழி காட்டியுள்ளார்.

கந்தர் கலிவெண்பாவில் குவலயம் கொண்டாடும் குமர குருபரர், குமரவேள் பெருமானது திருவிளையாடல்களையும், அவரது அற்புதச் சக்திகளையும், அண்டசராசரங்களையும் அவர் படைத்துப் பேணும் வகைகளையும், அணியணியாக விவரித்து விட்டு, பெருமானது திருவுருவக்கோலத்தை வர்ணிக்கும் அழகு ஈடு இணையற்றதாகும். அந்த ஐந்து வயது ஞானக்குழந்தையின் மெய்ஞ்ஞானக் காட்சிப் புலனுக்குத் தம் திருவுருவக் கோலத்தைக் காட்டி காட்சியளித்தார் போலும் கந்தவேள் பெருமான்! எனவே தான் கண்ட காட்சிக்கோலத்தை அங்ஙனமே அழகாக விவரிக்கின்ருர் குமரகுருபரர்.

"........................மின்னுருவம்
தோய்ந்த நவரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரணமணிமுடியும் —தேய்ந்த பிறைத்
துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியுங் கண்மலர் ஈராறும்—பருதி
பலவு மெழுந்து சுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வு தருஞ் செய்ய மலர்முகமும்—"

குமரகுருபரர் வரைந்த இந்த அழகான காவிய ஓவியத்தை அன்பர்கள் தங்கருத்தில் கருத்துடன் பதியவைத்து செவ் வேள் பெருமானைச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தை மகிழ்வார் களாக.

வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவரும், காட்சிக்கு அடங்காத கட்டழகருமான, வள்ளிமணவாளப் பெருமானது ஞான மேனியின் எழில் வடிவத்தை, இங்ஙனம் குமரகுருபரர் கந்தர் கலி வெண்பா என்ற ஓவியக் கருவியால் அடியார்கட்குப் படம் பிடித்துக் காண்பிக்கின்றார்.

நக்கீரனார் நற்றிரு முருகாற்றுப் படையில் விளக்கிய நற்காட்சியை; அருணை அருந்தமிழ்ச் செல்வர் அருணகிரிநாத அடிகளார் அரிய திருப்புகழிலும், அலங்காரத்திலும் விளக்கிய அருள்மேனி யண்ணலார் காட்சியை; கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரரும் கந்தவேள் பெருமானின் கவினுறு கோலத்தை விளக்கி வரைந்துகாட்டும் அழகு பெரிதும் போற்றிப் பணியத் தக்கதாகும்.

மாற்றானாய் நின்று மறச்செயல்களாற்றிய சூரனும், போரில் இளைத்து நின்றபோது பெற்ற ஞானத்தால் கண்ட காட்சியில் கந்தவேள் பெருமான் அரிய கோலத்தை வர்ணனை செய்யும் பகுதியையும் நோக்குவோமாக. ஆயிரங்கோடி மன்மதர்கள் ஒன்றாய்த்திரண்டு நின்றபோது உருவாகும் அழகின் குவியல், செவ்வேள் பெருமானது சேவடியில் மிளிரும் எழிலுக்கு இணையாகாதெனின், மற்றும் அவர் முழுமேனி அழகிற்கும் உவமை கூற யாரால் இயலும்? என்று வியந்து விழைந்து போற்றுகின்றான் எனில், பெம்மான் முருகன் பேருருவின் எழிலை நம்போன்றாரால் நவிலமுடியுமோ!

ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன்றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந்தன்னிற்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடி னிணைய தொல்லோன்
மாயிரு வடிவிற்கெல்லா முவமையார் வருக்க வல்லார்.

இப்படிப்பட்ட ஒப்புவமையற்ற இளவழகனது இணையற்ற திருமுகங்கள் ஆறும் ஆருயிர்கட்குக் கருணை கூர்ந்திடும் நோக்கையும், அவர் தம் பன்னிரண்டு கரங்கள் பாருக்குப் பயன்படும் பேற்றையும், அழகிய பொன் ரத்தின ஆரங்கள் அழகு செய்யும் மார்பகத்தையும், அதனிடையில் புரண்டு பொலிவுடன் காட்சியளிக்கும் கண்டிகை ஆரங்களின் எழிலும், முப்புரி பொன்னூலும் செப்பரியக் காட்சியாக விளங்குவதையும், மிக அழகான பட்டுடைக் கச்சணியும், கிண்கிணி தண்டைச் சிலம்பணிந்த வேதங் காணா விழுமிய பாதமும் எங்ஙனம் காட்சியளிக்கின்றதாம் எனின், நூறு ஆயிரங்கோடி சூரியர்கள் திரண்டு வந்து ஒன்றாகக் காட்சியளிப்பதுபோல் தோன்றியதாம் அறுமுகப் பெருமானது அருட் திருக்கோலம் குமரகுருபரருக்கு.

சைவக் கொழுந்தாயும், செந்தமிழ்க் களஞ்சியமாயும், தவக் கடலாயும், ஆறுபதிகளிலும் அருட்கோயில் கொண்ட அண்ண

லாயும், ஆறெழுத்தையும் அன்புடன் தியானிக்கும் அடியார்களது அகத்தை உறைவிடமாய்க் கொண்ட அருளாளராயும் விளங்கும் வெற்றிவேல் பெருமானே! என்று போற்றிப் புகழ்ந்து பொன்னுரை புகல்கின்றது "கந்தர் கலிவெண்பா".

செந்தமிழ்ச் செவ்வேள் பரமனே! உம்மை வணங்கி உம்மையே அடைக்கலமாய் உற்ற உண்மையன்பர்களது உள்ளத்தில் உல்லாசமாக வீற்றிருக்கும் மெய்ஞ்ஞான பண்டிதனே! பழுத்த தமிழ்ப் புலமையை அடியேனுக்கு வழங்குக. ஒழுக்கமாய் வாழும் உறுதியை அளித்திடுக. எளியேனது நல்வினை தீவினையென்ற இரு வேதனைகளையும் ஒழித்திட இன்னருள் நல்குவாயாக.

ஏனெனின் இருவினையால்தான் பிறவி வருகின்றது. பிறவியால் துன்பம் பெருகுகின்றது.

"ஒருவழிபடாது மாயை யிருவினை விடாது நாளும்
உழலுமது ராக மோக அநுபோகம்"

என்றபடி இருவினையால் எத்தனைப் பிறவியில் உழல்வது? இதுவே இந்த உயிர்க்குப் பெரும் அநுபோகமாகி இதினின்று மீள வகையறியாது வருந்துகின்றது. எம்பெருமானே! என அருணைவள்ளலார் பேசியுள்ளார். அவர் மேலும் வள்ளிமணவாளனிடம் மேலான ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றார்.

இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடை மருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே.

என்று இருவினையும், மும் மலங்களும் அதனால் வரும் இறப்பும், பிறப்பும் அற்று, உம் இன்னருளில் இரண்டறக் கலந்து, என்றும் மாறாத இன்பத்தில் திளைக்க அருள்வாயாக என்று அருணகிரிநாதர் அழகாகக் கூறியது போன்று என் இருவினைகளை யொழிக்க துணை செய்வாயாக.

நல்ல உத்தம அடியார்களது உயர்ந்த கூட்டுறவை அடியேனுக்குக் கூட்டுவித்து; அடியார்க்கு அடியனாயிருந்து அருந்தொண்டாற்றி அரிய ஞானஒளிபெற ஆசிர்வதிப்பாயாக. உமது ஒப்பற்ற திருவடிக் காட்சியை அடியேனுக்குக் காட்டியருளி, எளியேனது இதய தாமரையில் என்றும் அமர்ந்து எப்பொழுதும் என் முன்னின்று அருள்பாலிப்பாயாக.

என்ற விழுமிய வேண்டுகோளில் கந்தர் கலிவெண்பா முடிகின்றது. ஞானபண்டிதப் பெருமானது ஞானக் குவியலாம் பேராற்றலை, கந்தபுராண சாரத்தை, செந்தூராண்டவன்

அருளால் செந்தமிழ் நாட்டிற்கு வழங்கிய ஞான குருநாதராம் ஸ்ரீகுமரகுருபர அடிகளார் திருவடியைச் சென்னிமிசைவைத்துச் சிந்தித்துப் போற்றுவோமாக.

எந்த நாட்டிற்கும் வாய்க்காத இப் பெரும்பேறு செந்தமிழ் நாட்டிற்கு வாய்க்கத் துணையாக யிருந்த அக்குருநாதரது பெற்றோர்கட்குத் தமிழகம் என்றும் நன்றிசெலுத்துமாக. திரு முருகப் பெருமானைத் தியானித்து வழிபடும் அருள் நூல்களில் கந்தர் கலிவெண்பாவும் என்றென்றும் அன்பர்களால் போற்றிப் புகழ்ந்து பாராயணம் செய்யவேண்டிய பீடுடைய பெரு நூலாகும்.

வேலும் மயிலுந் துணை!

அற மொழிகள்

20. நல்ல குணங்களே மக்களின் நல்லொழுக்கச் சின்னங்களாகும். நாட்டுக்கு ஒரு நல்ல அரசு. வீட்டுக்கு ஒரு சிறந்த மனையாள். பாட்டுக்கு ஒரு சிறந்த வித்வான். கூட்டுக்கு ஒரு சிறந்த நண்பன். ஏட்டுக்கு ஒரு சிறந்த எழுத்தாளன். மாட்டுக்கு ஒரு சிறந்த எஜமான். காட்டுக்கு அடர்ந்த மரங்கள் போன்று மனிதனுக்குச் சிறந்தது நற்குணங்களாகும்.

21. பற்றற்றால் மனம் பரம சாந்தியடையும். மனம் அலைவதற்குக் காரணம் மாளாத அவாதான். இயந்திரத்தை இயக்கிவிட்டால் அது ஓடத்தானே செய்யும்! மனம் ஒரு இயந்திரம்; அதை ஆசையென்ற விசையால் இயக்கினால் அது அலைந்து ஓடியவண்ணமாக யிருக்கின்றது.

22. மனம் வாக்கு காயம் என்ற முக்கரணங்களும் உருக வழிபடும் அன்பர்களை, அழுத பிள்ளையை அணைத்து ஆதரிக்கும் தாய்போல் ஆண்டவன் ஆட்கொள்வான்.

23. யமுனையும், கங்கையும், சரஸ்வதியும் திருவேணியில் சங்கமமாவதால் எல்லோராலும் புண்ணியத் தீர்த்தமெனப் போற்றப்படுவதுபோல், அடியார்களும், பெரியோர்களும் இறையருளில் சங்கமமாவதால் உலகத்தாரால் கொண்டாடப் படுகின்றனர்.

24. ரமணீயமான இயற்கைக் காட்சியைக் கவிஞன் ரசிப்பான். அந்த ரசிப்பால் கவிதை மலரும். அஃதே போன்று இறை வழிபாட்டுப் பாடல்களைப் பாடி ரசித்தால் பக்தன் மனதில் அன்பெனும் ஊற்று மலரும்.